**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 219-2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 4 | | Examined as : PW 3 | |
| Name | : கவிதா | Defence | : |
| Father/Husband Name | : பக்கிரிசாமி | Court | : |
| Village | : காவல் ஆய்வாளர், மன்னார்குடி நகர காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 46/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 27.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர் இல்லை. (u/s 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.01.2018ம் தேதி நான் பூம்புகார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பூம்புகார் கல்லூரியில் சாலை மறியல் செய்வதாக கிடைத்த தகவலின் படி நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் மூர்த்தி, தலைமை காவலர் முருகவேல் ஆகியோருடன் சம்பவ இடம் சென்றோம். அங்கு எவ்வித அரசு அனுமதியும் பெறாமல் பேருந்து கட்டண உயர்வை கண்டித்த ராகேஷ் சர்மா மற்றும் ராஜூ ஆகியோர பூம்புகார் கல்லூரி எதிரில் மெயின் ரோட்டில் செல்லும் வாகனத்தை மறித்தும், பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு செய்தும் மேலும் கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு இடையூறு செய்து ஆர்பாட்டம் செய்தவர்களை காரணம் கூறி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு கைது செய்தும், எதிரிகளுடன் 10.00 மணிக்கு காவல் நிலையம் வந்து பூம்புகார் காவல் நிலைய குற்ற எண். 14/2018, இதச பிரிவுகள் 143, 341, 7(1)(a) CLA Act கீழ் வழக்கினை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 1ஆக குறியீடு செய்யப்படுகறிது**.

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகவேல் மற்றும் மூர்த்தி

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அவை முறையே **அசாஆ 2 மற்றும் அசாஆ 3ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சம்பவத்தின் உடனிருந்து மூர்த்தி, முருகவேல், வினோபா ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 25.01.2018ம் தேதி இதச பிரிவுகள் 143, 341, 7(1)(a) CLA Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் எனக்கு கீழ் பணிபுரியும் காவல் துறை அலுவலர்கள் என்றால் சரிதான். தனி நபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நானும் மற்ற காவலர்களும் எங்களது இருசக்கர வாகனத்தில் சென்றோம். மேற்படி விபரத்தை காவலர்கள் எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. பூம்புகார் கல்லூரியில் பணிபுரியக்கூடிய பேராசியர்களோ, விரிவுரையாளர்களோ, நுழைவு வாயில் காப்பாளரோ ஆர்பாட்டம் குறித்து ஏதேனும் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. சாலை மறியல் குறித்து தனி நபர்கள் யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. நான் சொல்வது போல் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், பூம்புகார் கல்லூரியில் படிக்கும் இரண்டு மாணவர்கள் மேல் புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்ளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.